A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 13 / 2025</u>**

திரு M. மனோகரன்,
க. எண். 98/120A, பொய்யேரி,
குப்புச்சிபாளையம், ப.வேலூர் – 638 182.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு K. ராசப்பன்)

எதிர்

1. உதவி மின்பொறியாளர்/ ப.வேலூர்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
3, 11-B2, கந்தா நகர், By-pass ரோடு,
ப.வேலூர் – 638 182.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ ப.வேலூர்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
3, 11-B2, கந்தா நகர், By-pass ரோடு,
ப.வேலூர் – 638 182.

. .. . எதிர்மனுதாரர்கள்
(திரு M. வினோத் குமார், உதவி மின்பொறியாளர்/ ப.வேலூர்
திரு S. வரதராஜன், செயற்பொறியாளர்/ இ&ப/ ப.வேலூர்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 10-02-2025</u>**

**<u>கேட்புரை நாள்: 08-04-2025</u>**

**<u>ஆணை நாள்: 15-04-2025</u>**

10.02.2025 அன்று பெறப்பட்ட திரு M. மனோகரன், க. எண். 98/120A, பொய்யேரி, குப்புச்சிபாளையம், ப.வேலூர் – 638 182 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 13/2025 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது

மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.04.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளர் சர்வே எண் 352/3F1A–இல் கூட்டுப்பட்டாவில் உள்ள தன்னுடைய இடத்திற்கு மின் இணைப்பு வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் சர்வே எண் 352/3F1A–இல் கூட்டுப்பட்டாவில் உள்ள தன்னுடைய இடத்திற்கு TNERC விதிமுறைகளின்படி உரிய ஆவணங்களான உரிமை ஆவணங்கள் மற்றும் விடுதலைப் பத்திரங்களுடன் காப்புறுதி பத்திரம் இணைத்து மின் இணைப்பு வழங்குமாறு தெரிவித்துள்ளார்.

2.2 கூட்டு பட்டாதாரர் திரு. ரமேஷ்பிரபு என்பவரின் ஆட்சேபனை காரணமாக மின்சார இணைப்பு வழங்க இயலாது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதிலில் திருப்தி இல்லாததால் மேல்முறையீட்டாளர் நாமக்கல் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 21.11.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், நாமக்கல் மின் பகிர்மான வட்டம் 17.12.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு :**

3.1 நாமக்கல் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 17.12.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *மனுதாரர் மின் இணைப்பு கோரும் இடத்தின் வருவாய் ஆவணங்களை முறையாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் புதிய மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு செயற்பொறியாளர்/இ&ப/ப.வேலூர் அவர்களுக்கு உத்தரவிட்டு மனு எண் 053 ஆனது இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.04.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு K. ராசப்பன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு M. வினோத் குமார், உதவி மின்பொறியாளர்/ ப.வேலூர் மற்றும் திரு S. வரதராஜன், செயற்பொறியாளர்/ இ&ப/ ப.வேலூர், நாமக்கல் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் இம்முறையீட்டு மனுவிற்கு சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 CGRF 17.12.2024 நாளிட்ட தீர்ப்புரையில் எதிர்மனுதாரர் செயற்பொறியாளர் ப.வேலூர் அவர்கள் பத்தி 1 ல் திரு ரமேஸ்பிரபு என்பவர் ஆட்சேபனை காரணமாக மின்இணைப்பு வழங்க இயலாது என்ற ஆணை நாள் 17.12.2024 கிடைக்கப்பெற்ற தேதி 13.01.2025 எனவும், TNERC விதிமுறைப்படி விண்ணப்பம் உள்ளதாகவும், இதில் உரிய ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இதில் உரிமை ஆவணம் பதிவு எண் 2634/2005 2688/2006 விடுதலை பத்திரம் ஆகியவற்றை மறுக்க மின்வாரிய விதிதொகுப்பில் விதி ஏதும் இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 17.12.24 நாளிட்ட தீர்ப்புரையில் எதிர்மனுதாரர் செயற்பொறியாளர் ப.வேலூர் காவல் நிலையத்தில் திரு மனோகரன் பாகப்பரிவினை சம்பந்தமாக புகார் கொடுத்திருப்பதாக கூறுவது அப்பட்டமான பொய் எனவும், மேலும் புகாரினை கூர்ந்தாய்வு செய்யாமல் FIR இல் இல்லாத ஒன்றை காரணம் காட்டி மின்இணைப்பு வழங்க மறுப்பது ஏற்கதக்கது அல்ல எனவும், TNERC விதிமுறையில் எங்கும் இந்த மாதிரியான காவல்நிலைய புகார்க்காக மின்இணைப்பு வழங்கக்கூடாது என்று கூறுவது தவறாகும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 பத்தி 3ல் ரசீது எண் 2024/200142/1878 ன்படி வீட்டுவரி ரசீது மனோகரன் மற்றும் ரமேஷ்பிரபு ஆகியோரின் தந்தை திரு பி.மணி அவர்களின் பெயரிலுள்ளதாகவும், இதன் மூலமாக ப.வேலூர் செயற்பொறியாளர் நேரடியாக பி.மணியின் மகன்தான் மனோகரன் என்பதை ஏற்பளிப்பு செய்து ஒத்துக்கொள்கிறார் எனவும், மேலும் பதிவு ஆவணங்களான விடுதலைப் பத்திரமும் உறுதிசெய்கிறதாகவும், TNERC விதிமுறைப்படி எந்த இடத்திலும் வீட்டுவரி ரசீது பெயர் மாற்றம் செய்தால் மட்டுமே மின்இணைப்பு வழங்க வேண்டும் என விதிமுறைகள் இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 பத்தி 4 ல் விண்ணப்ப எண் 2260524583 நாள்:18.05.24 HOLD செய்யப்பட்டதும் ரத்து செய்யப்பட்டதும் ப.வேலூர் செயற்பொறியாளரால் விவரிக்கப்பட்டுள்ளதாகவும், TNERC விதிமுறைப்படி முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும்

கூடுதல் ஆவணம் தேவை என்பதை எந்த விதியின் அடிப்படையில் என்பதை நிரூபிக்க எதிர்மனுதாரர் கடமைப்பட்டவராவர் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 சர்வே எண் 352/3F1A ல் உள்ள தன்னுடைய இருப்பிடம் தனக்கும் கூட்டுஉரிமை என்பதாலும் கூட்டுரிமையாளர் திரு.ரமேஸ்பிரபு ஆட்சேபனை தெரிவிப்பதாலும், இதற்கு TNERC மின்சார பகிர்மான விதித்தொகுப்பில் பிரத்யோகமாக (specific) படிவம் பிரசுரிக்கப்படாத காரணத்தினால் விதித்தொகுப்பு 27/4 ல் உள்ள படிவம் 6 லேயே காப்புறுதி பத்திரம் இணைத்து மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 உறுப்பினர் கூட்டுபட்டாவை தனிப்பட்டாவாக மாற்றவேண்டும் என்பது எழுவினா மற்றும் பதில் TNERC விதிமுறைப்படி ஏற்கதக்கது அல்ல எனவும், TANGEDCO, MEMO No: CE/COMML/EE3/AEE2/FSC OBJECTION/D.8 2015 DT.28.10.20215 ல் (VII) PARAGRAPH ல் தீர்ப்புகள் மற்றும் பதிவுருக்களையும் தனக்கு மின் இணைப்பு வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

When NOC was insisted to provide a separate electric supply to a co-owner who has inherited the property jointly with his brother and sister, the Hon'ble court madras in WP No 24959 of 2015 dated 17.08.2015 has held that the petitioner is entitled to get electricity connection as long as he is the co-owner of the property and remins in legal possession. So also in WP No 24977 of 2015 dated 13.08.2015 it has been held that the petitioner is entitled to domestic service connection as long as the property remains in lawful possession, in WP No 26425 of 2015 dated 25.08.2015, the hon'ble high court /Madras has also held that merely because of providing domestic electricity service connection to the petitioner, it will not confer any title upon him in the said property.

5.7 குறைதீர்க்கும் மன்றத்தில் தன்னுடைய வாதுரையானது பதிவு செய்யப்படவில்லை எனவும், மேலும் வாதுரை பதிவேட்டில் தன் கையெழுத்து பெறப்படவில்லை எனவும், குறைதீர்க்கும் மன்ற கூட்டத்திற்கு முன்பாக பரமத்தி வேலூர் செயற்பொறியாளர் மன்றத்திற்கு (Nodel அலுவலர்) சமர்ப்பித்த பதிலுரையின் நகலை தனக்கு அனுப்பபடவில்லை எனவும், விசாரணை இடத்தில்தான் பதிலுரையின் நகலை கேட்டு பெற்றுகொண்டதாகவும், அதில் செயற்பொறியாளர் /வேலூர் (Nodel அலுவலர்)

தான் மன்றத்திற்கு சமர்பித்த மூன்று வழக்குகளைப்பற்றி குறிப்பாக திருவேங்கடம் VS செயற்பொறியாளர் வழக்கு தீர்ப்புரை பற்றி எந்தவிதமான பதிலுரையும் அதில் அளிக்கப்படவில்லை எனவும், தான் மன்றத்தில் இது பற்றி விவாதித்தும் தீர்புரையில் பதிவு செய்யப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மேற்கண்ட சர்வே எண்ணில் உள்ள வீட்டில் தனது தாயார் திருமதி. பூங்கொடி வயது 71 அவர் மட்டும் அடிப்படையான மின்சாரம் வசதி இன்றி இருட்டில் வசித்து வருவதாகவும், ஆகவே மின்சாரம் வழங்க தக்க தீர்ப்பினை வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 ப.வேலூர் பிரிவு அலுவலகம் குப்புச்சிபாளையம் கிராமம் பொய்யேறி பகிர்மானம் சர்வே எண்: 352/3F1A என்ற முகவரியில் திரு.மனோகரன் அவர்கள் புதிய மின் இணைப்பு வேண்டி விண்ணப்ப எண்:200042260524583/18.05.2024 மூலம் பதிவு செய்ததாகவும், அப்பதிவில் ஆவணமாக 10.11.2005 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் மட்டுமே ஆன்லைன் மூலமாக பதிவேற்றம் செய்யப்பட்டிருத்ததாகவும், வீட்டுவரி இரசீது போன்ற இதர ஆவணங்கள் இணைக்கபடவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேலும், மின் இணைப்பு வழங்க கள ஆய்வு மேற்கொண்ட பொழுது விண்ணபதாரரின் சகோதரர் திரு.ம.ரமேஷ்பிரபு அவர்கள் மின்இணைப்பு கோரிய இடமானது இருவருக்கும் பாத்தியப்பட்டது எனவும் மேற்படி 6 செண்ட் நிலமானது அவர்களது குடும்பத்தில் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினையின்படி பொதுவில் இருவருக்கும் பாத்தியப்பட்டது என்றும் 6 செண்ட் நிலத்தில் அமைத்துள்ள ஓட்டுவீடு மற்றும் காலி இடத்தினையும் இருவரும் இதுவரை பாகமாக பிரித்து கொள்ளவில்லை என்றும் தெரிவித்துக்கொண்டு அவர்களுக்குள் பாகம் பிரிக்கப்படாத நிலையில் அந்த 6 செண்ட் நிலத்திற்குள் அமைந்துள்ள வீட்டு பாகத்தினை அவரது சகோதரர் திரு.ம.மனோகரன் அவர்கள் அவர் பங்கிற்கு அடைந்து கொள்ள திட்டமிட்டு புதியதாக அவரது பெயருக்கு மட்டும் மின் இணைப்பு கோரி விண்ணபித்துள்ளார் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 அவ்வாறு மின்இணைப்பு வழங்கினால் அவருக்குரிய பாத்தியத்தை மீட்க சிரமம் ஏற்படும் எனக் கருதுவதால் தனிப்பட்ட முறையில் திரு.ம.மனோகரன் பெயருக்கு மட்டும் மின் இணைப்பு வழக்குவதை தவிர்த்து ஆவணங்களின் படி கூட்டாக இருவர் பெயருக்குமே சேர்த்து மின் இணைப்பு வழங்க வேண்டும் என வாய்மொழியாக வலியுறுத்தியும். அவ்வாறு இல்லையெனில் தனிப்பட்ட முறையில் அவர் பெயருக்கு மின்இணைப்பு வழங்க கூடாது என ஆட்சேபித்து கடிதமும் அவரது ஆட்சேபனைக்கு ஆதாரமாக பாக பாத்திய விடுதலை பத்திர ஆவண எண்.2688/நாள்:27.09.2006–ன் நகலினையும் மற்றும் இதர ஆவணங்களையும் அளித்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் கூடுதலாக வருவாய்த்துறையின் சர்வே 6:352/3F1A (உட்பிரிவிற்கு முன் 352/3F) கணினி பட்டா எண்:5160–யும் ஆவணமாக அளித்ததாகவும், மேற்படி ஆவணங்களை பரிசீலித்த வகையில் மின் இணைப்பு கோரிய வீடானது மேற்படி இருவருக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்பது கள ஆய்வின் மூலமாக ஆவணங்களின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டதாகவும், விண்ணப்பதாரரும் மேற்படி கூற்றை மறுக்கவில்லை எனவும், அதன் பொருட்டு விண்ணப்பதாரர் திரு.ம.மனோகரனுக்கு உரிய அறிவிப்பின் மூலமாக அவர்தம் தரப்பு ஆவணங்கள் ஏதும் இருப்பின் அளிக்க வலியுறுத்தப்பட்டதாகவும், தொடர்ந்து விண்ணப்ப எண் 200042260524583/நாள்:18.05.2024 ஆனது கூடுதல் ஆவணங்கள் கோரி "HOLD" செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 இந்நிலையில் இரு தரப்பினரும் அவரவர் கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிவையிலும் மேற்படி விஷயம் தொடர்பாக வேலூர் காவல் நிலையத்தில் புகார் பெறப்பட்டு அவர்களுக்கு இடையில் விசாரணை நடைபெற்று முடிவுக்கு வராத நிலையில் கடந்த 6.11.2024 தேதியில் உரிய ஆவணங்களை விண்ணபதாரர் வழங்கப்படாத நிலையில் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 அதனை தொடர்ந்து விண்ணப்பதாரர் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகி கோரிக்கை விடுத்ததாகவும், அதன் அடிப்படையில் வாரிய தரப்பு நிலைப்பாடு மற்றும் ஆவணங்கள் விளக்கமாக தாக்கல் செய்ததன் அடிப்படையில் கடந்த

17.12.2024–ல் மனுதாரர் மின் இணைப்பு கோரும் இடத்தில் வருவாய் ஆவணங்களை முறையாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் புதிய மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தீர்வு வழங்கப்பட்டு முடித்து வைக்கபட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 விண்ணப்பதாரர் தரப்பில் TNERC விதிப்படி விண்ணப்பம் உள்ளதாகவும், உரிய ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது ஏற்புடையது அல்ல எனவும், ONLINE மூலமாக பதிவேற்றம் செய்துள்ள பாகபாத்திய விடுதலை பத்திரத்தில் மேற்படி வீடு மற்றும் காலியிடம் அமையப்பெற்றுள்ள சர்வே எண் 352/3F–ல் (தற்போதைய சர்வே எண். 352/3F 1A)–இல் 6 செண்ட் நிலமானது இருவருக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றே குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அதில் விண்ணப்பதாரருக்கு பாத்தியப்பட்ட பாகம் குறித்து எதும் குறிக்கப்பட்டிருக்கவில்லை எனவும், கூட்டுரிமையாளரின் சம்மதமோ அவரது ஒப்புதலோ பெற்று விண்ணப்பதாரர் தரப்பில் சமர்ப்பிக்காத நிலையில் விண்ணப்பம் இரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேற்கண்ட இடத்தில் மின் இணைப்பு பெறுவது தொடர்பாக விண்ணப்பதாரருக்கும் சகோதார் திரு.ம.ரமேஷ்பிரபு என்பவருக்கும் ஏற்பட்ட பிரச்சனையை முன்னிட்டு காவல்துறை விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்த தகவல் அறிந்த நிலையில் மேற்கண்ட விண்ணப்பம் HOLD செய்யப்பட்டு பின்னர் கூடுதல் ஆவணங்களை விண்ணப்பதாரர் வழங்கப்படாத நிலையில் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேற்குறிப்பிட்ட ஓட்டு வீட்டின் வீட்டு வரி தொடர்பான ஆவணங்களை பரிசீலித்த வகையில் வேலூர் பேரூராட்சி வரி விதி எண் 1900 இரசீது எண் 2024–2025/200142/1/1870–ஆனது மேற்படி விண்ணப்பதாரர் மற்றும் அவரது சகோதரர் ஆகியோரின் தந்தை திரு.பி.மணி அவர்களின் பெயரிலேயே விண்ணப்பிக்கும் தேதி வரை மாற்றம் செய்யப்படாமல் இருந்து வந்ததை அறிய முடிந்ததாகவும், மேற்படி இரசீதினை பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பம் சகோதரர் திரு.ம.ரமேஷ்பிரபு அவர்கள் ஆட்சேபனை தெரிவித்து வந்ததால் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை எனவும்

அறியப்பட்டதாகவும், விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட முறையில் வீட்டு வரி பெயர் மாற்றம் செய்யப்படாத நிலையில்தான் விண்ணப்பம் இரத்து செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 விண்ணப்பதாரர் மின்இணைப்பு கோரும் இடத்தில் கூட்டுரிமையாளர் ஆட்சேபனை தெரிவித்துள்ள நிலையில் அவர்களின் சம்மதம் இன்றி வீட்டு மின் இணைப்பு வழங்க இயலாது என்ற நிலைபாட்டின் அடிப்படையிலும் மனுதாரர் கோரியவாறு இருப்பிட சான்றிதழ் அடிப்படையில் மின் இணைப்பு வழங்க சாத்தியம் இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 மனுதாரர் தெரிவித்துள்ளவாறு தமிழ்நாடு மின் பகிர்மான விதி 27/4–b உள்ள படிவம் 6–ஆனது இருப்பிட உரிமையில்லாமல் உரிமையாளர் சம்மத கடிதம் தராமல் விண்ணப்பிக்கும் நுகர்வோர் தரவேண்டிய காப்புறுதி படிவம் ஆகும் எனவும், இக்குறிப்பிட்ட நிகழ்விற்கு மேற்படி காப்புறுதி படிவம் பொருந்தாது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 விண்ணப்பதாரர் தரப்பில் கோடிட்டு காட்டப்பட்டுள்ள வாரிய குறிப்பாணை மற்றும் சென்னை உயர்நீதி மன்ற W.P.24959 OF 2015 –ன் தீர்ப்பாணை ஆகியவை மேற்படி வழக்கில் அதன் தன்மைக்கேற்ப வழங்கப்பட்டவை ஆகும் எனவும், மேலும், மேற்படி விண்ணப்பதாரர் தரப்பில் விண்ணப்பிக்கப்பட்ட இடம் அவர் வசம் (LAWFUL POSSESSION) மட்டுமே உள்ளது என்ற நிலையும் இந்நிகழ்வில் ஏற்படவில்லை எனவும், இருப்பிடத்தினை பாத்தியப்பட்ட இருவருமே பயன்படுத்தி வருவதாகவே அறிய முடிகிறது எனவும், மேலும் விண்ணப்பதாரரின் சகோதரர் திரு.ம.ரமேஷ்பிரபு அவர்கள் மேற்படி இடத்திற்க்கு இருவர் பெயரிலும் கூட்டாக மின் இணைப்பு பெற சம்மதம் தெரிவித்த நிலையில் விண்ணப்பதாரர் தெரிவிக்கும் காரணங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கூட்டாக உள்ள வீட்டிற்க்கு அவரது பெயரில் மட்டும் தனிப்பட்ட முறையில் மின் இணைப்பு கோருவது விதிகளின்படி ஏற்புடையது அல்ல எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் சர்வே எண் 352/3F1A ல் உள்ள தன்னுடைய இருப்பிடம் தனக்கும் கூட்டுஉரிமை என்பதாலும் கூட்டுரிமையாளர் திரு.ரமேஸ்பிரபு ஆட்சேபனை தெரிவிப்பதாலும், இதற்கு TNERC மின்சார பகிர்மான விதித்தொகுப்பில் பிரத்யோகமாக (specific) படிவம் பிரசுரிக்கப்படாத காரணத்தினால் விதித்தொகுப்பு 27/4 ல் உள்ள படிவம் 6 லேயே காப்புறுதி பத்திரம் இணைத்து மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மின் நுகர்வோர் குறைதீர்மன்ற தீர்ப்பின் அடிப்படையில், கூட்டு பட்டாதாரர் திரு. ரமேஷ்பிரபு என்பவரின் ஆட்சேபனை காரணமாக மின்சார இணைப்பு வழங்க இயலாது என்று தெரிவித்துள்ளதாகவும், ஆனால், தனது விண்ணப்பம் TNERC விதிமுறைகளின்படி உரிய ஆவணங்களான உரிமை ஆவணங்கள் மற்றும் விடுதலைப் பத்திரங்களுடன் சமர்ப்பித்துள்ளதாகவும், எனவே தனது விண்ணப்பத்தை நிராகரிக்க எந்த விதியும் இல்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 மேலும், மேல்முறையீட்டாளர் தொடர்பான காவல்நிலைய புகார் FIR பதிவு செய்யப்படவில்லை எனவும், முறையாக ஆய்வு செய்யப்படாமல் அந்த புகாரை அடிப்படையாகக் கொண்டு மின்சார இணைப்பு வழங்க மறுப்பது ஏற்கத்தக்கதல்ல எனவும், TNERC விதிமுறைகளில் காவல் நிலைய புகாரின் அடிப்படையில் மின்சார இணைப்பு மறுக்கலாம் என்ற எந்த விதியும் இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 மேலும், கூட்டுபட்டாவை தனிப்பட்டாவாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை TNERC விதிமுறையில் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகும் எனவும், நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில், ஒருவருக்கு ஒரு சொத்தில் கூட்டுரிமை இருந்தால், அவருக்கு தனியாக மின் இணைப்பு வழங்க முடியும் எனவும், அதேசமயம், மின் இணைப்பு வழங்குவது உரிமையை உறுதி செய்யும் என்பதற்கான அடையாளம் ஆகாது எனவும், இவை அனைத்திற்கும் மேலாக, தனது 71 வயது தாயார் திருமதி. பூங்கொடி அடிப்படை மின்சார வசதி இன்றி இருட்டில் வசிக்க நேரிடுவதாகவும், அவளுடைய நலனை கருத்தில்

கொண்டு மின்சார இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் சர்வே எண்: 352/3F1A என்ற முகவரியில் திரு.மனோகரன் அவர்கள் புதிய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்திருந்த நிலையில், அவர் இணையதளம் மூலமாக பதிவேற்றம் செய்த ஆவணங்களில் 10.11.2005 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் மட்டுமே இடம்பெற்றிருந்ததாகவும், வீட்டுவரி ரசீது உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் சேர்க்கப்படாததன் காரணமாக விண்ணப்பம் Hold செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மின் இணைப்பு வழங்கும் முன் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது, மனோகரனின் சகோதரர் திரு.ம.ரமேஷ்பிரபு அவர்கள், மின் இணைப்பு கோரிய நிலம் இருவருக்கும் பாத்தியமானது என்றும், அந்த 6 செண்ட் நிலத்திற்குள் அமைந்துள்ள வீடு மற்றும் காலி இடத்திற்கான உரிமை இருவருக்கும் சேர்ந்துள்ளது என்றும், இதுவரை அவர்களுக்குள் நிலப்பிரிவு நடத்தப்படாததால், மனோகரன் தனிப்பட்ட முறையில் மின் இணைப்பு பெற முன்வந்திருப்பது உறுதியாகும் எனவும், இவ்வாறு தனிப்பட்ட முறையில் மின் இணைப்பு வழங்கினால், பாகப்பிரிவினை நடைமுறையில் மேற்கொள்வதில் சிக்கல் உருவாகும் என்பதால், இணைப்பு இருவரின் பெயரிலும் வழங்கப்பட வேண்டும் என வாய்மொழியாகவும், எழுத்து மூலம் ஆட்சேபித்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 மேல்முறையீட்டாளர் இணையதளம் மூலமாக பதிவேற்றிய பாகப்பிரிவினை பத்திரத்தில், குறிப்பிட்ட 6 செண்ட் நிலம் இருவருக்கும் சேர்ந்து உள்ளது என்று மட்டும் கூறப்பட்டுள்ளதால், அவர் எந்தப் பகுதியின் உரிமை பெற்றுள்ளார் என்பதை உறுதி செய்ய முடியவில்லை எனவும், மேலும், அவர் சகோதரரின் சம்மதம் பெறப்படாததால், தனிப்பட்ட முறையில் மின் இணைப்பு வழங்குவது முறையானதல்ல எனவும், மின் இணைப்பு கோரிய இடத்தில் உரிய ஆவணங்களை விண்ணப்பதாரர் சமர்ப்பிக்காத காரணத்தினால், கடந்த 06.11.2024 அன்று அவரது விண்ணப்பம் இரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித் தொகுப்பு 27(1)(a) மற்றும் படிவம் 1–இல் கூறப்பட்டுள்ள வரையறைகள் ஆராய விரும்புகின்றேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"27. Requisitions for supply for energy:*
*(1) the duty of Licensee to supply electricity is as below:*
*(a) Every Distribution Licensee shall, on an application by the owner or occupier of any premises, give supply of electricity to such premises, within one week after receipt of the application requiring such supply.*
*Provided that where such supply requires extension of distribution mains, or commissioning of new sub-stations, the Distribution Licensee shall supply the electricity to such premises immediately after such extension or commissioning or within such period as specified in the Distribution Standards of Performance Regulations, 2004 by the Commission as amended."*

*"FORM I*
*Application Form for L.T Service connection for new or additional demand.*
*FORM OF REQUISITION FOR SUPPLY OF LOW TENSION ENERGY (SINGLE PHASE / THREE PHASE)*
*[Refer regulation 27(3)]*

*xxx*
*xxx*
*xxx*
*Note: The application shall be accompanied with the following documents:*
*(i) Self attested copy of proof of ownership such as sale deed (or partition deed (or) gift settlement (or) allotment letter (or) computer patta (or) ownership certificate issued by revenue department officials (or) court judgment or recent property tax receipt.*
*(ii) In case of joint property, self attested copies of proof of ownership along with parent* documents specified in note (i) above and consent letters from co-owners. If consent *letter is not produced, an indemnity bond with enhanced security deposits.*
*(iii) If the applicant is not the owner, consent letter from owner in Form No.5 or valid proof of occupancy and indemnity bond in Form No.6*
*(iv) Copy of applicant(s)' identity card (issued by Central / TN State Govt.)"*

7.10 மேற்கூறிய விதிகளின்படி ஒரு மின் இணைப்பு பெற மின் நுகர்வோர் மின் இணைப்பு கோரும் இடத்தில் வசிப்பவராக இருக்கும் பட்சத்தில் மேற்குறிப்பிட்ட படிவம் I–இன்படி (i) சுய சான்றொப்பமிட்ட விற்பனை ஆவணம் (அல்லது) பாகப்பிரிவினை ஆவணம் (அல்லது) கொடை அறுதியாவனம் (அல்லது) ஒதுக்கீட்டுக் கடிதம் (அல்லது) கணினி பட்டா (அல்லது) வருவாய்த்துறை அலுவலர்கள் வழங்கப்பட்ட உடைமைச் சான்றிதழ் (அல்லது) நீதிமன்றத் தீர்ப்பு அல்லது அண்மையில் செலுத்தப்பட்ட

சொத்துவரி ரசீது போன்ற ஆவணத்தின் நகல், (ii) கூட்டுச் சொத்தாக இருக்கும் நேர்வில், மேலேயுள்ள குறிப்பு (i) இல் குறித்துரைக்கப்பட்ட தாய்பத்திரங்களின் நகலுடன் சேர்த்து உடைமையை நிரூபிப்பதற்கான ஆவணத்தின் மற்றும் உடன் உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட சம்மதக் கடிதத்தில் சுய சான்றொப்பமிட்ட நகல்கள், சம்மதக் கடிதம் அளிக்காத பட்சத்தில் காப்புறுதி பத்திரம், உயர்த்தப்பட்ட காப்பு வைப்புத் தொகையுடன் விண்ணப்பிக்கலாம் என்று தெரியவருகிறது.

7.11 மேலும் இது சம்பந்தமாக உரிமதாரர் தரப்பிலிருந்தும் கடித எண். Memo No. CE/Comml/EE3/AEE2/F.SC objections/D.855/2015 dt. 28.10.2015–இன் வாயிலாக பல்வேறு நீதிமன்ற ஆணைகளை குறிப்பிட்டு ஆட்சேபனை இருக்கும் நிலையில் மின் இணைப்பு வழங்க அளிக்கப்பட்ட சுற்றறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பி.ப.பா

62

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD**

**144, Anna salai,**
**Chennai – 600 002**

**Memo.No.CE/Comml/EE3/AEE2/F.SC objections/D.855/2015 dt 28-10-2015**

Sub: TANGEDCO – Consideration of applications for electricity and disconnection of existing electricity supply when objections are received – Instructions – Issued.

*****

In the matter of providing electricity supply or disconnection of existing electricity supply, often, remarks/opinion of headquarters is sought for, generally, without considering the provisions of section 43 of the Electricity Act, 2003 and regulation 27 of the Tamil Nadu Electricity Distribution Code, 2004 as amended from time to time and also without considering the opinions/remarks offered in similar cases on previous occasions. Repeated references to Headquarters on very same issue, on one pretext or other, causes much inconvenience to the Headquarters offices and the same occupies the time to be taken for sensitive issues and issues involving revenue. Besides, it is also seen that, a lot of litigations have been raised by the unsuccessful applicants/intending consumers before the Hon'ble High Court/Madras (Principal Bench and Madurai Bench) and also before various civil Courts. Therefore, it is considered necessary to issue instructions based on the provisions in the Electricity Laws and the decisions of the Hon'ble High Court, Madras for strict compliance.

2. It is stated in the first instance that section 43 of the Electricity Act, 2003, among other things, provides that every distribution licensee, shall, on an application by the owner or occupier of any premises, give supply of electricity to such premises, within one month after receipt of the application requiring such supply, but subject to the restrictions provided therein. Regulation 27 of the Tamil Nadu Electricity Distribution Code, 2004, inter-alia, provides that owner or occupier with the consent of the owner or occupier producing valid proof of his being in occupation of the premises is also entitled to electricity supply. In the forms appended to the regulation 27 of the TNE Distribution Code, 2004, the documents required to be provided by the intending consumer are also clearly specified.

3. The Hon'ble High Court, Madras, after considering the said statutory provisions, has rendered various decisions, some of them are stated below :-

(i) In P.Arumugam –vs- Government of Tamil Nadu and three others (TNEB case) in W.P.No.13996 of 2002 dated 13.09.2002 reported in 2003 Writ LR 248 (Mad), it has been held as follows :-

"It is also made clear that merely because the power supply would be given, it would not confer ownership over the disputed land. It is stated by the counsel for the petitioner that in fact a civil suit is pending between the petitioner and the District Collector. It is made clear that such suit is to be disposed of on its own merits and the fact that power supply connection now being given to the petitioner cannot be considered as the basis for conferring any right on the petitioner and the petitioner's right is to be judged on the basis of other materials on record."

(ii) So also, the Hon'ble High Court/Madras, in M.Rajendran –vs- Assistant Electrical Engineer, TNEB, Nallur, Tiruppur District and another, in WP No.66 of 2013 dated 11.02.2013, reported in (2013) 4 MLJ 150, has held that the grant of electricity service connection to the property in question, by the first respondent, shall not confer any right or interest to the petitioner, in respect of the property in question.

(iii) In Dr.Kalavalli –vs- The Chairman, TNEB and 3 others in WP No.12083 of 2013 dated 30.04.2013, it was held as follows :-

"5. In my considered view, the said stand taken by the learned counsel appearing for the petitioner appears to be well founded. While granting electricity service connection, the electricity department may not be concerned with the suit filed by the fourth respondent claiming title over the said property. Since no interim injunction has been granted in favour of the fourth respondent there cannot be any impediment to grant electricity service connection to the petitioner. If any one has to wait till the disposal of the suit and further appeal thereon, then electricity service connection cannot be granted for very number of years....".

(iv) In S.A.Ponnappan –vs- J.A.Bathurujaman and two others in W.A.No.1396 of 2007 dated 15.04.2009 (TNEB case) reported in 2009 (2) TNCJ 411 (Mad), the Division Bench of the Hon'ble High Court has held as follows :-

"10. The above provision makes it clear that an intending consumer, who is in lawful occupation, can apply to the Electricity Board, with the consent of the landlord, for supply of electricity. In case if the owner refused to give consent letter or he is not in station, the consumer shall produce a proof that he is in lawful occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure III of this Code indemnifying the Electricity Board against any loss on account of disputes arising out of effecting service connection.

11. In such view of the matter, when there is a provision as enacted by the State Electricity Regulatory Commission in accordance with Section 86 of the Electricity Act, 2003 (Central Act 36 of 2003), certainly the lawful occupant has a right to have the electricity supply and if he is compelled to lead his life in darkness, it would amount to make him lead an animal life, which is not the purport of the Constitution. Therefore, we are of the view that the said Clause confers such valuable right to the occupant.".

v) When the property of a co-owner sought electricity supply, which property is the subject matter of partition suit with other legalheirs are pending, the Hon'ble High Court, Madras in WP No.19534 of 2015 dated 06.08.2015 has held that the petitioner in

possession of the property as a co-owner she is entitled to enjoy the property by having an electricity connection either for residential or non-residential purpose.

(vi) When the electricity supply to a service disconnected for non-payment of charges was refused on the ground of objection by the brother of the consumer alleging that he is having a share in the property, the Hon'ble High Court, Madras in WP No.10650 of 2015 dated 18.08.2015 has held that the petitioner was already given patta; had been enjoying the electricity until disconnection; until finality of the proceedings initiated between the petitioner and her brothers, the same cannot be an obstacle to give reconnection; there was no dispute between the petitioner and his brothers at the time of giving service connection and the dispute arose much later; and that until the dispute attains a finality and the Civil Court declares right of the petitoner, there should not be any prohibition for the petitioner to enjoy the electricity service connection and also ordered to give reconnection within two days on receipt of charges due.

(vii) When NOC was insisted to provide a separate electricity supply to a co-owner who has inherited the property jointly with his brother and sisters, the Hon'ble High Court, Madras in WP No.24959 of 2015 dated 17.08.2015 has held that the petitioner is entitled to get electricity connection as long as he is the co-owner of the property and remains in legal possession. So also, in WP No.24977 of 2015 dated 13.08.2015, it has been held that the petitioner is entitled to domestic service connection as long as the petitioner is one of the co-owner of the property and remains in lawful possession, notwithstanding the objection by a relative. While reiterating the said possession, in WP No.26425 of 2015 dated 25.08.2015, the Hon'ble High Court/Madras has also held that merely because of providing domestic electricity service connection to the petitioner, it will not confer any title upon him in the said property.

(viii) When an objection is raised for providing electricity supply to a subsequent purchaser on the grounds that the objectors are having shares in the property; that their brothers & sisters sold the property without their knowledge; and that a suit for partition and for declaration of the sale deed as null and void, the Hon'ble High Court, Madras, in WP No.25929 of 2015 dated 20.08.2015, has held that the petitioners cannot prevent the

buyer from enjoying the property and getting all amenities from the authorities as he already became the owner of the property by virtue of the sale deed and as long as the sale deed is valid and buyer is in possession of the property, he is entitled to enjoy the property as owner; and that the objectors having filed a suit failed to get any interim relief before the Civil Court, they cannot approach the High Court, by way of writ petition by abusing the process of law.

(ix) When a consumer for many years was directed to produce documents pursuant to a complaint alleging production of fabricated documents to get service connection, the Hon'ble High Court, Madras, in WP No.29586 of 2015 dated 21.09.2015, has held as follows :-

"5. It is very unfortunate to note that based on the complaint received from Seviappan which does not disclose any material evidence, the fifth respondent has issued notice to the petitioner to produce the relevant documents. In fact, the fifth respondent should have called upon the complainant to produce the relevant document with regard to his claim in respect of the said property. Assuming for a moment that even if there is a dispute, the respondent has got no jurisdictional power to decide about the issue and if it all, only the Civil Court can decide the issue. Moreover, the electricity service connection is not given recently but it was given about 15 years ago. When that is the position, the issuance of notices by the fifth respondent is unjustified, unwarranted and to be deprecated and it is accordingly, deprecated.".

(x) In A.Nazeer Ahmed -vs- Assistant Engineer (North Division), TNEB, Vaniyambadi and another in W.P.No.1040 of 2013 dated 03.04.2013, it has been held as follows :-

"3. Even assuming that an eviction order has been obtained by the second respondent against the petitioner, unless and until, the same is executed and delivery is obtained by the second respondent, the petitioner who is still holding the property is entitled for the electricity service connection. Therefore, in my considered view, merely because the eviction order has been obtained by the second respondent against the petitioner, the electricity service connection which is available shall not be disconnected. ..................".

4. The aforesaid statutory provisions in Electricity Laws and the decisions of the Hon'ble High Court, Madras referred to above go to show that if the following positions are satisfied, then, the distribution licensee is required to provide electricity supply to an intending consumer and/or refused to disconnect the electricity supply, notwithstanding the objections raised :-

(i) whether the applicant has produced the document(s) as required under regulation 27 of the TNE Distribution Code, 2004 as amended from time to time;

(ii) whether the applicant is in actual occupation/possession of the premises in question;

(iii) whether the applicant has satisfied all other requirements under the Codes/orders/ instructions in force;

(iv) whether that the required documents produced by the applicant are not declared null and void by the Court/authorities;

(v) that there is no order of the Court in force dispossessing or restraining the applicant from utilizing the subject premises; and

(vi) that there is no order of the Court in force restraining the TANGEDCO from providing electricity supply to the premises in question.

5. The orders of the Hon'ble Court referred to in paragraph 3 above are available in the official website of the Hon'ble High Court/Madras, which can be perused at www.hcmadras.tn.nic.in.

6. Therefore, the Chief Engineers of Distribution Regions and the Superintending Engineers of the Electricity Distribution Circles are directed to instruct the subordinate officers to strictly adhere to the position stated above insofar as pending/future applications. Insofar as the matters already pending before any Court, the Executive Engineer/Distribution concerned may be directed to consider the issue and refer the matter to the Standing Counsel/Government Pleader/Advocate concerned who is defending the case for TANGEDCO duly bringing this instructions to the knowledge of such Standing Counsel/Government Pleader/Advocate and to obtain his/her opinion and then further course of action considered accordingly. In case, any difficulty arises, it may be referred to O/o CE/Commercial for guidance.

(sd)xxx
CHIEF ENGINEER/ COMMERCIAL
FOR DIRECTOR (DISTRIBUTION)

To
The Superintending Engineers/Distribution Circles
The Chief Engineers/Distribution/Regions.

**Copy to**
The Legal Adviser, TANGEDCO, Chennai-2.
All Standing Counsels/TANGEDCO
The Assistant Legal Advisers/Legal Cell
The Senior Administrative Officer/Legal Section/Madurai
The Section Officers/Legal Section/Chennai & Legal Cell
The Assistant Personnel Officer/Tamil Development for publication in TNEB Bulletin (2 copies).

7.12 மேற்கூறிய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படியும் உரிமதாரரின் சுற்றறிக்கையில் சொல்லப்பட்ட சரத்துக்களின் அடிப்படையிலும் மின்

நுகர்வோர் மின் இணைப்பு வேண்டும் பட்சத்தில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து மின் இணைப்பு பெற வாய்ப்புள்ளது. மேலும் கேட்புரையின் போது மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரும் இடத்தில் வசித்து வருவதற்கான இருப்பிட சான்றிதழ் பெற்றுள்ளதாக தெரிவித்தார். எனவே, இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய 6 செண்ட் நிலத்திற்கான கூட்டுரிமை பத்திரத்தினை சமர்ப்பித்து, கூட்டு பங்குதாரர் சம்மத கடிதம் கொடுக்காத நிலையில் காப்புறுதி பத்திரம் சமர்ப்பித்து மின் இணைப்பு கோரும் நிலையில் அதனை நிராகரிக்கும் எதிர்மனுதாரரின் செயல் ஏற்புடையதாக இல்லை.

7.13 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரும் 6 செண்ட் இடத்தின் கூட்டுரிமைக்கான ஆவணங்கள் மற்றும் இருப்பிட சான்று ஆகியவற்றை சமர்ப்பித்துள்ளார், ஆனால் கூட்டு உரிமையாளரின் சம்மதக்கடிதம் அளிக்கவில்லை. எனவே, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி விண்ணப்பத்துடன் காப்புறுதி பத்திரம் மற்றும் உயர்த்தப்பட்ட காப்பு வைப்புத் தொகை பெற்று அவருக்கு மின் இணைப்பு வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரும் இடத்திற்கான உரிய ஆவணங்கள் சமர்பித்துள்ள நேர்வில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி விண்ணப்பத்துடன் காப்புறுதி பத்திரம் மற்றும் உயர்த்தப்பட்ட காப்பு வைப்புத் தொகை பெற்று அவருக்கு மின் இணைப்பு வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 13/2025 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திரு M. மனோகரன், – By RPAD
க. எண். 98/120A, பொய்யேரி,
குப்புச்சிபாளையம், ப.வேலூர் – 638 182.

2. உதவி மின்பொறியாளர்/ ப.வேலூர்,
**நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,**
**தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,**
3, 11–B2, **கந்தா நகர்,** By-pass **ரோடு,**
ப.வேலூர் – 638 182.

3. செயற்பொறியாளர்/ இ&ப/ ப.வேலூர்,
**நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,**
**தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,**
3, 11–B2, **கந்தா நகர்,** By-pass **ரோடு,**
ப.வேலூர் – 638 182.

4. மேற்பார்வை பொறியாளர், – By email
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
**தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,**
ஜெய் சூர்யா டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் எதிரில்,
திருச்செங்கோடு ரோடு, நாமக்கல் – **637 001.**

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
**தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,**
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
**144,** அண்ணாசாலை, சென்னை – **600 002.**

**6.** செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**

**7.** உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**